DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>(Chapter.. | ... | DEPOSITION OF WITNESS |
| Preliminary Register | ... | Case No. S.C.No.260/2024 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W.9<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | கார்த்திக் |
| Father's Name | த/பெ.இசக்கிமுத்து |
| Village | கோரம்பள்ளம் |
| Taluk | |
| Age | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2026.

**(1ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2 முதல் 6 எதிரிகள் ஆஜர்.)**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது தூத்துக்குடி கோரம்பள்ளம் தெற்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறேன். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஹெல்மட் சம்பந்தமாக நான் முத்தையாபுரம் காவல் நிலையம் சென்றபோது அங்கு வைத்து போலிசார் என்னிடம் சில கையெழுத்துக்கள் மட்டும் பெற்றுக்கொண்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் சக்திவேல் என்பவரது ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். சக்திவேல் என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அசா.ஆ.13** ஆகும். 02.05.2024ம்

தேதி காலை 10.30 மணிக்கு தயார் செய்ததாக உள்ள அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் **அ.சா.ஆ.14** ஆகும். அதேபோன்று காலை 11.30 மணிக்கு தயார் செய்ததாக உள்ள அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் **அ.சா.ஆ.15** ஆகும். வேறு விவரம் எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பில் அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

போலிசார் விசாரணையில் 02.05.2024 ம் தேதி காலை 09.15 மணிக்கு நானும் விக்னேஷ் என்பவரும் தூத்துக்குடி - மதுரை பைபாஸ் ரோட்டில் உள்ள மீன்வளக்கல்லூரி அருகில் சென்றுகொண்டிருந்தபோது முத்தையாபுரம் காவல் நிலைய ஆய்வாளர் அழைத்ததன்பேரில் சக்திவேல் மற்றும் ரமேஷ்ரேவந்த் ஆகியோர்களை கைது செய்து விசாரித்தார்கள் என்றும் அப்போது சக்திவேல் என்பவர் காலை 09.30 மணியளவில் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும்அதன்பேரில் காலை 10.30 மணியளவில் அவர் ஆஜர்படுத்திய TN 69 AK 5916 என்ற இருசக்கர வாகனத்தை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார்கள் என்றும் அதன்பின்னர் ரமேஷ்ரேவந்த் என்பவரது மாமனார் வீட்டு அருகில் உள்ள முள்செடி மறைவில் வைத்திருந்த அருவாள் ஒன்றை காலை 11.30 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார்கள் என்றும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகளில் நாங்கள் இருவரும்

சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u> இல்லை.**

**ஒம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**